**SC.183/2017**

அ.சா.**1** சரண்யா

28-11-2022 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை தொடர்ச்சி **:-**</u>

நான் எனது அப்பாவை காணவில்லை என்று புகார் கொடுத்தபிறகு போலீசார் விசாரித்து சொல்வதாகச் சொன்னார்கள். எனது அப்பா 9786131020 என்ற தொலைபேசி எண்ணை பயன்படுத்தி வந்தார். 10-11-2009 அன்று நான் கொடுத்த புகார்தான் என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இரண்டு நாட்கள் கழித்து காவல் துறையினர் என்னை தொடர்பு கொண்டு எனது அப்பாவின் தொலைபேசி எண்ணில் எனது அப்பாவுடன் தொடர்பில் இருந்தவர்களின் பெயர்களைச் சொல்லி, வெங்கடேசன் என்பவருடன் கடைசியாக பேசியுள்ளதாகவும், வெங்கடேஷ் மற்றும் எனது அப்பாவின் இரண்டு தொலைபேசி எண்களின் அலை தொடர்பு (நெட்ஓர்க்) ஒரே வழியில் தொடர்பில் இருந்துள்ளது என்றும், தெரிவித்தார்கள். அதன்படி காவல் துறையிடம் நான் வெங்கடேஷ் என்பவர் ஒரு நிலப்புரோக்கராக இருந்து வந்தார் என்றும், இது தொடர்பாக வீட்டிற்கு வந்து செல்வதை நான் பார்த்துள்ளேன் என்றும், சொன்னேன். எனது அப்பாவிற்கு ராம்லட்சுமண நகரில் 15 செண்ட் நிலம் இருந்தது. அதனை விற்பனை செய்வதற்காக எனது அப்பா முயன்று வந்தார். அதற்காக அறிமுகமானவர்தான் வெங்கடேசன் என்பவர் ஆவார். அம்மாவழியில் நஞ்சுண்டாபுரத்தில் 98 செண்ட் நிலம் இருந்து வந்தது. அந்த நிலம் தொடர்பாக வெங்கடேசன் மற்றும் டி.மணி என்பவர்களின் பெயர்களில் ஒரு பவர்ஆப் அட்டார்னி இருந்தது. அது போலியாக தயார் செய்யப்பட்டிருந்தது. அதன் ஜெராக்ஸ் காப்பி வீட்டில் இருந்தது. அதனை போலீசாரிடம் ஒப்படைத்தேன். பின்பு

இந்த நிலங்கள் தொடர்பாக வில்லங்கச் சான்றிதழ்களை மீனா எஸ்டேட்டில் இருந்த பீளமேடு சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து, அதன் நகல் பெறுவதற்கு முன்பாகவே சார்பதிவாளர் அலுவலக கணினிமூலமாக ராம்லட்சுமண நகர் 15 செண்ட் நிலத்தில் வெங்கடேசன் பெயரில் வேறுஒரு நபர் அப்பாவிற்கு பதிலாக புகைப்படம் ஒட்டி விற்பனைப் பத்திரம் ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்ததைப் பார்த்தேன். இது தொடர்பாக மீண்டும் காவல் நிலையம் சென்று போலி பத்திரம் பதிவு செய்யப்பட்ட விவரத்தை ஆய்வாளரிடம் தெரிவித்தேன். எனது அப்பா காணாமல் போன சில நாட்களிலேயே இந்த விவரத்தை நான் தெரிந்து கொண்டேன்.  ஆவணங்களிலும் எனது அப்பாவின் கையெழுத்துக்கள் போலியாக போடப்பட்டிருந்தது. அதனையும் போலீசாரிடம் தெரிவித்தேன். இந்த விவரங்கள் எனது அக்காவிற்கும் தெரியும். இந்த நிலையில் 20-07-2010 தேதியில் அவினாசி காவல் நிலையம் சார்பாக இறந்து கிடந்த ஒருவரின் உடல் அடையாளம் கோரி அறிவிப்பு (போஸ்டர்) ஒன்று ஒட்டப்பட்டிருந்ததை பார்வையிட்ட எனது சித்தப்பா அதில் காணப்படும் உடல் எனது அப்பாவாக இருக்குமோ என்று எண்ணி அவர் அவினாசி காவல் நிலையத்திற்கு நேரில் சென்று எனது அப்பாவை காணவில்லை. தேடி வருகிறோம் என்ற விவரத்தைச் சொல்லியுள்ளார். அதன் அடிப்படையில் அவினாசி காவல் நிலையத்திலிருந்து எனது அக்கா பாரதி என்கிற சத்தியாவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அங்கு வந்து பார்க்கும்படி தெரிவித்தனர். அதன்படி எனது அக்கா எனக்கு தெரிவிக்க, நாங்கள் இருவரும் அவினாசி காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு அவர்கள் இறந்தவரின் உடலிலிருந்து கைப்பற்றி வைத்திருந்த இரண்டு கருப்பு கலர் ஷூக்கள், கருப்பு கலர் பெல்ட், அவர் அணிந்திருந்த உடைகளின் பாகம் (கருகி இருந்தது), சட்டை ஆகியவற்றை எங்களிடம்

காட்டினார்கள். அதனைப் பார்வையிட்டு அந்த உடைகள் எனது அப்பாவுடையதுதான் என்று தெரிவித்தோம். மேலும் இறந்தவர் உடலின் புகைப்படம் எடுத்திருந்தார்கள். அந்த புகைப்படத்தையும் எங்களிடம் காட்டினார்கள். அதைப் பார்த்து அந்த உடல் எனது அப்பாவுடையதுதான் என்று தெரிவித்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் (இரண்டு புகைப்படம்) உள்ள ஷூக்கள், புகைப்படத்தில் உள்ள பெல்ட், புகைப்படத்தில் உள்ள சாக்ஸ் (இரண்டு எண்ணிக்கை), புகைப்படத்தில் உள்ள கருகி இருந்த மஞ்சள், பச்சை கோடு போட்ட சட்டை ஆகியவற்றை பார்த்துத்தான் அடையாளம் சொன்னேன். (அந்த சான்று பொருட்கள் ஏற்கனவே அ.வ.எண்.51/2012-ல் குறியிடப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் அந்த சான்றுப் பொருட்களின் புகைப்படங்கள் குறியீடு செய்யப்படுகிறது) வலது கால் ஷூ உள்ள புகைப்படம் சா.பொ.1 ஆகவும், இடது கால் ஷூ உள்ள புகைப்படம் சா.பொ.2 ஆகவும், சாக்ஸ்கள் இரண்டு உள்ள புகைப்படம் சா.பொ.3 வரிசையாகவும், கருப்பு கலர் பெல்ட் புகைப்படம் சா.பொ.4 ஆகவும், கருகிய நிலையில் உள்ள சட்டை புகைப்படம் சா.பொ.5 ஆகவும் குறியிடப்படுகிறது. அன்றைய தினம் காட்டிய இறந்த உடலின் புகைப்படங்களின் ஜெராக்ஸ் காப்பிதான் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவதாகும். அது சா.பொ.6 வரிசையாக குறியிடப்படுகிறது. (அந்த அசல் புகைப்படங்கள் ஏற்கனவே அ.வ.எண்.51/2012-ல் குறியிடப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் அந்த சான்றுப் பொருட்களின் புகைப்பட ஜெராக்ஸ் நகல் குறியீடு செய்யப்படுகிறது) நாங்கள் அடையாளம் காட்டி இறந்த நபர் எனது அப்பாதான் என்று தெரிவித்தோம். மனதளவில் நான் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்ததால் அதன்பிறகு எனது அப்பாவின் உடல் என்ன ஆனது என்பதுகூட தெரிந்து கொள்ள இயலாமல் போய்விட்டது. எனது அக்காவிடம் எனது

அப்பாவின் உடல் என்ன செய்தார்கள் என்று தெரிவித்துள்ளார்கள். எனது அப்பாவின் உடலை என்னிடம் காட்டவில்லை. எனது அப்பாவின் சொத்துக்களை அபகரிக்கவேண்டி எனது அப்பா கொலை செய்யப்பட்டுள்ளார்.

(முதல் விசாரணை தொடர்ச்சி உணவு இடைவேளைக்கு பிறகு தொடர ஒத்தி வைக்கப்படுகிறது)

(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டிலின்பேரில் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

ஓம்/சரண்யா,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/K.Rajasekar,
Principal District Judge,
Coimbatore.